**காரியாபட்டி சந்தையில் காய்கறி விலை அதிகரிப்பு**

First Published : 20 Apr 2011 09:09:11 AM IST

காரியாபட்டி, ஏப். 19: காரியாபட்டி சந்தையில் காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

கோயில்களில் பங்குனித் திருவிழா நடந்து வருவதால், கடந்த வாரம் கிலோ ரூ. 80 வரை விற்ற எலுமிச்சம் பழம், இந்த வாரம் கிலோ ரூ. 52 என விலை குறைந்துள்ளது.

கத்தரிக்காய் கிலோ ரூ. 8-ல் இருந்து ரூ. 10, வெண்டைக்காய் கிலோ ரூ. 9-ல் இருந்து கிலோ ரூ. 14 என விலை அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் பாகற்காய் கிலோ ரூ.28-க்கு விற்பனையானது. தற்போது கிலோ ரூ. 32-க்கு விற்பனையாகிறது. மேலும் பீட்ரூட், கேரட், பட்டர் பீன்ஸ், முருங்கை பீன்ஸ், சோயா உள்ளிட்ட காய்கறிகளின் விலையும் கடந்த வாரத்தை விட இந்த வாரம் அதிகரித்து இருந்தது.

பட்டர் பீன்ஸ் கிலோ ரூ.70, கேரட் கிலோ ரூ.22, சோயா கிலோ ரூ.52 என செவ்வாய்க்கிழமை விற்பனையாயின.

இதுகுறித்து சந்தை வியாபாரிகள் சங்கத் தலைவர் ராஜா கூறியதாவது:

மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால், காய்கறிகளின் விளைச்சல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான காய்கறிகள் தேனி, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து காரியாபட்டிக்கு கொண்டு வரப்படுகின்றன. கோயில்களில் பங்குனித் திருவிழா, சித்திரை மாதப் பிறப்பு முடிவடைந்து விட்டதால், காய்கறிகளின் விலை இந்த மாதத்தில் விலை சற்று குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மே 15-க்குப் பின்னர் வைகாசி மாதத்தில் சுபமுகூர்த்த தினங்கள் வருவதால், அப்போது காய்கறிகளின் விலை மேலும் அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

**செயல்படாத நேரடி கொள்முதல் நிலையம்: ஸ்ரீவைகுண்டத்தில் 5,000 மூட்டை நெல் தேக்கம்**

First Published : 19 Apr 2011 12:08:20 PM IST

தூத்துக்குடி, ஏப். 18: தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டத்தில் அமைக்கப்பட்ட அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் கடந்த 15 நாள்களாக செயல்படவில்லை. இதில், சுமார் 5,000 மூட்டை நெல் தேங்கியுள்ளது.

இது தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி நதிநீர்ப் பாதுகாப்புப் பேரவை அமைப்பாளர் சி. நயினார் குலசேகரன், ஆட்சியருக்கு அனுப்பிய புகார் மனு:

மாவட்டத்தில் தாமிரபரணி பாசனத்தில் மருதூர் அணை கீழக்கால், மேலக்கால் ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 12 ஆயிரம் ஏக்கரில் பிசான நெல் சாகுபடி அறுவடை இப்போது நடைபெற்று வருகிறது.

விவசாயிகள் பயன்பெறும் நோக்கத்தில் ஸ்ரீவைகுண்டத்தில் அரசு சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டது. இந்த நிலையத்தில் 15 நாள்களாக நெல் கொள்முதல் நடைபெறவில்லை. இதனால் விவசாயிகள் கொள்முதல் நிலையத்துக்கு விற்பனைக்காகக் கொண்டுவந்த நெல் சுமார் 5,000 மூட்டைகள் கிட்டங்கிக்கு வெளியே எவ்விதப் பாதுகாப்புமின்றிக் கிடக்கின்றன.

வெளிச் சந்தையில் நெல் விலையைக் குறைத்து வியாபாரிகள் கேட்கின்றனர். இதனால், விவசாயிகளுக்கு பெரியளவில் நஷ்டம் ஏற்படுகிறது.

எனவே, ஆட்சியர் தலையிட்டு, ஸ்ரீவைகுண்டம் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் தொடர்ந்து செயல்பட்டு, தேங்கிக்

கிடக்கும் நெல்லையும், இனிமேல் கொண்டுவரப்படும் நெல்லையும் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

**சிற்றாறு 1 அணைப் பகுதியில் 54 மி.மீ. மழை**

First Published : 19 Apr 2011 11:59:38 AM IST

நாகர்கோவில், ஏப். 18: கன்னியாகுமரி மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் சிற்றாறு 1 அணைப் பகுதியில் அதிகபட்சமாக 54 மி.மீ. மழை பெய்துள்ளது. மாவட்டத்திலுள்ள பிற அணைப் பகுதிகளிலும், பிற இடங்களிலும் பதிவான மழையளவு (மி.மீட்டரில்):

பேச்சிப்பாறை-19.4, பெருஞ்சாணி-23.4, சிற்றாறு 2-29, இரணியல்-4.2, ஆனைக்கிடங்கு-4, குருந்தன்கோடு-16.2, அடையாமடை-46, கோழிப்போர்விளை-9, முள்ளங்கினாவிளை-14.6, புத்தன்அணை-23.4, நாகர்கோவில்-0.5, சுருளோடு-38.4, கன்னிமார்-15.2, ஆரல்வாய்மொழி-48.8.

**நெல்லையில் மிதமான கோடை மழை**

First Published : 19 Apr 2011 12:21:43 PM IST

திருநெல்வேலி, ஏப். 18: திருநெல்வேலியில் திங்கள்கிழமை கோடை மழை பெய்தது. இதனால் வெப்பம் சற்று தணிந்துள்ளது.

சில நாள்களாக கடும் வெயில் அடித்து வந்தது. இதனால் பகலிலும், இரவிலும் வெப்பம் நிலவியது.

இந்நிலையில் சில தினங்களாக மாவட்டத்தின் பிற பகுதிகளில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. திருநெல்வேலி, பாளையங்கோட்டை பகுதிகளில் திங்கள்கிழமை லேசான மழை பெய்தது. தொடர்ந்து வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. இந்த மழையால் வெப்பம் சற்று தணிந்துள்ளது.

**ஆலங்குளத்தில் தக்காளி கிலோ ரூ.2-க்கு விற்பனை**

First Published : 19 Apr 2011 12:19:43 PM IST

ஆலங்குளம், ஏப். 18: ஆலங்குளம் காய்கனிச் சந்தையில் திங்கள்கிழமை தக்காளி கிலோ ரூ. 2-க்கு விற்கப்பட்டது.

ஆலங்குளம் காய்கனிச் சந்தைக்கு சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்தும், சுரண்டை, சேர்ந்தமரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் தக்காளி விற்பனைக்கு வரும்.

அண்மையில் தக்காளி விளைச்சல் மிக அதிகமாக இருந்ததால் ஒரு வாரமாகவே விலை படிப்படியாக குறைந்து வந்தது.

இந்நிலையில், திங்கள்கிழமை கிலோ தக்காளி ரூ. 2-லிருந்து
ரூ. 3 வரை தரத்துக்கேற்ப விற்கப்பட்டது. விலை குறைவால் ஏராளமான தக்காளிகள் ஆங்காங்கே வீணாகிக் கிடந்தன. விலை குறைவால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். விவசாயிகள் கவலையடைந்தனர்.

தினமலர்

நடப்பு 2011-12ம் நிதி ஆண்டில்ரப்பர் உற்பத்தி 9 லட்சம் டன்னாக உயரும்

ஏப்ரல் 20,2011,01:44



கோட்டயம்:நடப்பு 2011-12ம் நிதியாண்டில், உள்நாட்டில், இயற்கை ரப்பர் உற்பத்தி 9 லட்சத்து 2 ஆயிரம் டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதே நிதியாண்டில், உள்நாட்டில் ரப்பர் பயன்பாடு, 9 லட்சத்து 77 ஆயிரம் டன்னாக இருக்கும் என, ரப்பர் வாரியத்தின் தலைவர் ஷீலா தாமஸ் தெரிவித்தார்.சென்ற 2010-11ம் நிதியாண்டில், நாட்டின் இயற்கை ரப்பர் உற்பத்தி, முந்தைய நிதியாண்டை விட 3.70 சதவீதம் அதிகரித்து, 8 லட்சத்து 61 ஆயிரத்து 950 டன்னாக உயர்ந்துள்ளது. இது, இதற்கும் முந்தைய 2009-10ம் நிதியாண்டில், 8 லட்சத்து 31 ஆயிரத்து 400 டன்னாக இருந்தது.ரப்பர் வாரியத்தின் 165வது ஆண்டு கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேசிய ஷீலா தாமஸ்,' உள்நாட்டில், ரப்பர் உற்பத்தி அதிகரித்து வருகிறது. என்றாலும், மோட்டார் வாகனத் துறையில் ஏற்பட்டுள்ள எழுச்சியின் காரணமாக, இயற்கை ரப்பர் பயன்பாடும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. குறிப்பாக, சென்ற 2010-11ம் நிதியாண்டில், இந்திய மோட்டார் வாகனத் துறை 23 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.இதே நிதியாண்டில்,

நாட்டின் ரப்பர் ஏற்றுமதியும் 20 சதவீதம் அதிகரித்துள்ளது. இருப்பினும், கனரக வாகனங்கள் மற்றும் பஸ்களுக்கான டயர் ஏற்றுமதி, சென்ற நிதியாண்டில் 5 சதவீதம் குறைந்துள்ளது' என்று தெரிவித்தார்.கடந்த 2010-11ம் நிதியாண்டில் நாட்டின் இயற்கை ரப்பர் ஏற்றுமதி, 28 ஆயிரத்து 424 டன்னாக இருந்தது. இது, இதற்கும் முந்தைய நிதியாண்டில், 25 ஆயிரத்து 90 டன்னாக இருந்தது. இதே ஆண்டுகளில், இயற்கை ரப்பர் இறக்குமதி, 1 லட்சத்து 77 ஆயிரத்து 482 டன்னாக இருந்தது. இதில், 73 சதவீதம், சுங்க வரி விலக்குடன், இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. நடப்பு 2011-12ம் நிதியாண்டின் தொடக்கத்தில், ரப்பர் கையிருப்பு 2 லட்சத்து 77 ஆயிரத்து 95 டன் அளவிற்கு இருந்தது. இது, சென்ற நிதியாண்டின் தொடக்கத்தில் 2 லட்சத்து 11 ஆயிரத்து 290 டன்னாக இருந்தது.சர்வதேச அளவில், இயற்கை ரப்பர் உற்பத்தி மற்றும் பயன்பாடு போக, பற்றாக்குறை, கடந்த 2010ம் ஆண்டில், 3 லட்சத்து 80 ஆயிரம் டன்னாக இருந்தது. இது, நடப்பு 2011ம் ஆண்டில் 2 லட்சத்து 34 ஆயிரம் டன்னாக இருக்கும் என சர்வதேச ரப்பர் வாரியத்தின் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பஞ்சாப் - அரியானா மாநிலங்களில்கோதுமை கொள்முதல் 69 சதவீதம் சரிவு**

ஏப்ரல் 20,2011,01:41



புதுடில்லி:நடப்பு ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் தேதி முதல் 15ம் தேதி வரையில், பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களில், கோதுமை கொள்முதல், சென்ற ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும் போது, 69 சதவீதம் குறைவாக உள்ளது.அரியானா, பஞ்சாப் மாநிலங்களில், கோதுமை அறுவடை தாமதமானதால் கொள்முதல் குறைந்துள்ளது என இந்திய உணவுக் கழகம் தெரிவித்துள்ளது.இம்மாநிலங்களில் இருந்து, இதுவரை 38.38 லட்சம் டன் கோதுமை கொள்முதல்

செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டின் இதே காலத்தில், 1.24 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டிருந்தது. நாட்டின் மொத்த கோதுமை கொள்முதலில், இவ்விரு மாநிலங்களின் பங்களிப்பு 73.53 சதவீதமாகும்.பஞ்சாப் மாநிலத்திலிருந்து, சென்ற ஆண்டு 1.02 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டிருந்தது. ஆனால், நடப்பாண்டில், இதுவரையில் இம்மாநிலத்திலிருந்து 6 லட்சம் டன் அளவிற்கே கோதுமை கொள்முதல் ஆகியுள்ளது. அதேசமயம், சென்ற ஆண்டின் இதே காலத்தில், 55 லட்சம் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டிருந்தது என, இந்திய உணவுக் கழகம் மேலும் தெரிவித்துள்ளது.

**மக்கள் கவனத்தை ஈர்க்கும் புளி சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,00:00 IST



புளியமரம் நம் நாட்டில் தொன்மையான மரங்களுள் ஒன்று. எத்தகைய கடினமான சூழ்நிலைகளையும் மண் வகைகளையும் தாங்கி வளரும். பெரும்பாலும் வனப்பகுதிகளிலும் தரிசு நிலங்களிலும் சாலையோரங்களிலும் மட்டுமே இதுவரை வளர்க்கப்பட்டு வந்த இம்மரப்பயிர் தற்போதைய மிகுதியான தேவையால் நல்ல விளைச்சல் நிலங்களிலும் தீவிர சாகுபடியில் முறையில் பயிர் செய்யப்படுகிறது. உணவு சமைப்பதில் முக்கிய இடத்தை பெற்றுள்ள புளி டார்டாரிக் அமிலம் செய்வதற்கும் உபயோகமாகின்றது. புளியங்கொட்டைகளை கொடுத்து அதனை விற்பதின் மூலம் வருமானத்தையும் ஈட்டித்தருகின்றது. கொட்டைகளை பொடியாக்கி கோந்துடன் சேர்த்து கொதிக்க வைத்தால் வலுவான கோந்த் என்பார்கள். யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பதுபோல் புளிய மரம் உயிரோடு இருந்தால் புளி மூலம் வருமானத்தை தருகின்றது. அதை வெட்டி விறகாக விற்றால் சுமார் 17 டன் விறகு கிடைக்கும்.

புளியை சாகுபடி செய்பவர்களிடம் வியாபாரிகள் குத்தகைக்கு மரங்களை எடுக்க ஓடோடி வருவார்கள். விதையில் முளைத்த கன்றினை நட்டபோது அது பலன்தர பல வருடங்கள் பிடிக்கின்றன. தற்போது புளி சாகுடியில் ஒட்டுக்கலை வெற்றி தந்துள்ளது. விவசாயிகள் ஒட்டுக்கன்றுகளை ஏக்கர் கணக்கில் சாகுபடி செய்ய முன்வந்துள்ளனர். இந்த கன்றுகள் தாய் மரத்தின் குணங்களை அப்படியே கொண்டிருப்பதுடன் கடுவிரைவில் அதாவது நட்ட மூன்றாவது ஆண்டிலிருந்தே காய்க்கத் துவங்கிவிடுகின்றன. தற்போது விவசாயிகளுக்கு உதவிவரும் ஒட்டுக்கன்று பி.கே.எம்.1 ஒட்டு ரகமாகும். இந்த ரகம் வறட்சியைத் தாங்குவதுடன் அதிக புளி மகசூலினைத் தருகின்றது. இதில் பழங்கள் கொத்து கொத்தாய் காய்ப்பதோடு, நார்த்தன்மை குறைவாகவும், சுவையான சதை 39 சதவீதமாகவும் உள்ளது. நன்கு வளர்ந்து காய்த்து குலுங்கும் (சுமார் 13 ஆண்டு மரம்) மரத்தில் மரம் ஒன்றில் 500 கிலோ மகசூல் கிட்டுகின்றது. புளி விலை கிலோ 100 ரூபாய் வரை விற்பனை ஆகின்றது. பி.கே.எம்.1 ரக புளி வறட்சி மிகுந்த திண்டுக்கல், தர்மபுரி, சிவகங்கை போன்ற பகுதிகளிலும் தமிழகத்தில் இதர பகுதிகளிலும் சாகுபடி செய்வதற்கு ஏற்றதாக உள்ளது. ஒட்டுக்கன்றுகள் (பி.கே.எம்.1) திண்டிவனம் தாலுகாவை சேர்ந்த வறட்சிப் பகுதியில் தோட்டக்கலை வல்லுனர் **ஆர்.ராம்குமார், (பாலப்பட்டு, ஜி.எஸ்.டி.ரோடு, பாலப்பட்டு-604 302, விழுப்புரம் மாவட்டம்**) தயார் செய்ததை விவசாயிகளுக்கு விற்பனை செய்து கொண்டு இருக்கிறார். சிவகங்கையைச் சுற்றி தரிசு நிலங்களில் பி.கே.எம்.1 என்ற ரகத்தை நட்டு புரட்சி கண்டு வரப்படுகின்றது. இப்பகுதிகளில் நட்ட மூன்று வருடங்களிலேயே மகசூல் எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த ரகம் இப்பகுதிகளில் பலவித பலன்களைத் தருகின்றன.

1. உணவுப் பொருட்களில் சுவை சேர்க்கப்படுகிறது. 2. பழங்களில் டார்டாரிக் அமிலம் தயாரிக்கப்படுகிறது. 3. கொட்டைகளை அரைத்து கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தப்படுகிறது. ஒட்டுப்புளியை நடவு செய்ய ஆனி மாதம் முதல் ஐப்பசி மாதம் வரை (ஜூலை - நவம்பர்) ஏற்ற பருவமாகும். இந்த ரகத்தின் கன்றுகளை 10மீ து 10மீ இடைவெளியில் நடவு செய்யலாம். ஒரு ஏக்கரில் 40 மரக்கன்றுகள் நடவு செய்து பராமரிக்கலாம். தகுந்த தொழில்நுட்பத்தை அனுசரித்து ஏக்கரில் 160 கன்றுகள் நடலாம். இப்பகுதிகளில் உள்ள நிலத்தடி நீரினை சிறிதும் வீணாக்காமல் சொட்டுநீர் பாசனம் கொடுத்து செடிகள் பராமரிக்கப்படுகின்றது. இக்கன்றுகளை நடுவதற்கு 2 அடி து 2 அடி து 2 அடி அளவு உள்ள குழிகளை எடுத்து ஒரு மாதத்திற்கு உலரவிட்டு மேல் மண்ணுடன் தொழு உரத்தை கலந்து செடிகள் நடப்பட்டு வருகின்றன. இது சமயம் இயற்கை உரங்கள் மட்டும் இடப்படுகின்றது. ரசாயன உரங்கள் இடப்படுவதில்லை. ஒட்டுச்செடிகளை நடவு செய்யும்போது ஒட்டுப்பகுதியை தரையிலிருந்து சுமார் 2 அங்குலம் மேலாக இருக்குமாறு நடவு செய்யப்படுகிறது. காற்றினால் ஒட்டுப்பகுதி உடைந்துவிடாமல் இருக்க குச்சி நட்டு, தகுந்த பாதுகாப்பு கொடுக்கப்படுகின்றது. கன்றினை நட்ட பிறகு அது நல்ல வளர்ச்சியை அடையும்வரை அந்த கன்றுக்கு சரியான இடைவெளியில் நீர்பாசனம் செய்து வரவேண்டும். செதில் பூச்சி மற்றும் மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த 1%

மானோகுரோட்டோபாஸ் காய்க்கும் பருவத்தில் தெளிக்க வேண்டும். சாம்பல் நோயினைக் கட்டுப்படுத்த 0.1% கராத்தேன் தெளிக்க வேண்டும். நடவு செய்து மூன்று வருடங்களுக்கு பிறகு ஒவ்வொரு வருடமும் ஏப்ரல்-மே மாதங்களில் புளி அறுவடைக்கு தயாராகிவிடும். விவசாயிகள் உரிகம் என்ற புளி ரகத்தையும் தும்கூர் ரகத்தையும் தேர்வு செய்யலாம். இவைகளில் தரமான புளி கிடைக்கும்.-எஸ்.எஸ்.நாகராஜன்.

**மாம்பிஞ்சு, காய்களில் கருநிறத்திட்டுகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,00:00 IST.

மா சாகுபடியாளர்களே! உங்கள் மாமரத்தில் மாம்பிஞ்சு, காய்களில் கருப்பு நிற புள்ளிகள் ஏற்படுகின்றனவா? அப்படிப்பட்ட பிஞ்சுகள் பெருமளவில் உதிர்கின்றனவா? மாம்பழங்களில் கருப்புநிற வட்ட வடிவில் அழுகல் காணப்படுகின்றனவா?

அப்படியானால் ஆந்த்ரக்னோஸ் எனப்படும் பூசண நோய் ஏற்பட்டிருக்கலாம். இந்நோய்க்கு "பறவைக்கண் நோய்' என மற்றொரு பெயரும் உண்டு. இந்நோய் பிஞ்சு மற்றும் காய் பருவங்களில் தோன்றி, முதிர்ந்த மாங்காய்கள் பழுக்கும்பொழுது பெரிய ஒழுங்கற்ற கரும்புள்ளிகளாக மாறும். மேல் தோல்பகுதி கருமை நிறமாகிவிடும். பழத்தின் சதைப்பகுதி அழுகிவிடும்.

நோய் பரவும் விதம்: பூக்கும் பருவத்தில் மற்றும் பிஞ்சு, காய் பருவத்தில் பெய்யும் மழை, இந்நோய் பரவுவதற்கு சாதகமாக அமையும். பூசண வித்துக்கள் காற்றின் மூலம் பரவுகின்றன. பிஞ்சு மற்றும் காய்களில் கண்ணுக்குத் தெரியாத காயங்கள் உண்டானால் இந்நோய் அதிகம் காணப்படும். வருமுன் கட்டுப்படுத்த மா மரத்தில் இலைகள், கிளைகள், பூங்கொத்துக்கள் மற்றும் பிஞ்சுகளைப் பாதிக்கும் ஆந்த்ரக்னோஸ் நோயினைக் கட்டுப்படுத்த, சூடோ மோனாஸ் புளூரசன்ஸ் என்ற உயிரியல் பூஞ்சாணக் கொல்லி மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு கிராம் வீதம் தெளிக்க வேண்டும். பதினைந்து நாட்கள் இடைவெளியில் மறுமுறை தெளிக்க வேண்டும். நோய் வந்தபின் கட்டுப்படுத்த மான்கோசெப் இரண்டு கிராம் மருந்து, ஒரு லிட்டர் தண்ணீர் அல்லது கார்பன்டசிம் 1 கிராம் ஒரு லிட்டர் தண்ணீர் அல்லது குளோரோதலானில் இரண்டு கிராம் ஒரு லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் கலந்து அறுவடை செய்வதற்கு முன் பதினைந்து நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்க வேண்டும்.

மருந்துக்கரைசல் பூங்கொத்துக்கள், கிளைகள், இலைகள், பிஞ்சுகளில் நன்கு படிவதற்காக சாண்டோவிட், இன்ட்ரான், பைட்டோவெட், ஸ்டிக்கால் போன்ற திரவ சோப்புகளில் ஒன்றினை ஒரு லிட்டர் மருந்துக்கரைசலுக்கு கால் மில்லி வீதம் சேர்த்துக் கலக்கிக் கொள்ள வேண்டும். முதிர்ந்த காய்களை அறுவடை செய்யும் முன் மேற்கண்ட மருந்துகளில் ஏதேனும் ஒன்றினை

கண்டிப்பாக தெளித்து பழங்களில் தோன்றும் பழ அழுகல்களைக் கட்டுப்படுத்தலாம். மேலும் உழவர்கள் தங்களின் பயிர் பாதுகாப்பு பிரச்னைகளுக்குத் தகுந்த ஆலோசனை பெற பாதித்த பயிர் மாதிரியுடன் ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள பயிர் மருத்துவ நிலையத்தினை நேரில் அணுகுமாறு ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் ந.முருகேசன் கேட்டுக்கொள்கிறார்.ந.முருகேசன், பேராசிரியர் மற்றும் தலைவர்,ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,00:00 IST



முருங்கைத் தேனை கொடுக்கும் அன்னை தேனீ பண்ணையின் அடுத்த புதுமை தும்பை மற்றும் துளசித்தேன்: தேன் சேகரிப்பில் இன்று பலர் ஈடுபட்டு வந்தபோதும் அன்னை தண்டாயுதபாணி தனக்கென்று ஒரு தனி வழி அமைத்து செயல்படுபவர். தேன் என்றால் பலவிதமான மலர்களிலிருந்து சேர்க்கப்படுவது என்பதை மாற்றி மருத்துவ குணம் நிறைந்த சிறந்த ஒரு குறிப்பிட்ட பூவிலிருந்து சேகரித்து தேனை சந்தைப்படுத்துபவர். கரூர்-அரவக்குறிச்சியில் ஏராளமாக நிறைந்திருக்கும் முருங்கைத் தோட்டங்களிலிருந்து இவர் சேகரித்த முருங்கைத்தேன் விளம்பரமானது. ரசாயன கலப்பு என்றாலே எதுவென்று தெரியாத, முழுக்க முழுக்க இயற்கையாக முளைத்த மருத்துவ குணங்கள் நிரம்பிய தும்பை மற்றும் காட்டுத்துளசி செடிகளிலிருந்து தேனை சேகரிக்கிறார்.

தமிழகத்தில் தேன் சேகரிப்போரில் பலர் கேரள பகுதிகளில்தான் அதிகமான தேன் சேகரிக்கிறார்கள். அங்கு சேகரிக்கப் படும் தேன் பெரும்பாலும் ரப்பர் தேன்தான். ரப்பர் தேன்

இந்த தேனைக் காட்டிலும் சுவை, நிறம், மருத்துவ குணம் ஆகியவை வித்தியாசமானதாகத்தான் இருக்கும். அதனால்தான் இவர் வித்தியாசமான தேன் வகைகளைத் தயாரிக்கிறார். மேலும் தகவல்களுக்கு: **நி.தண்டாயுதபாணி, 21, நடராஜ நாயக்கர் தெரு, சோழிங்கநல்லூர், சென்னை-600 119. 90030 54725.**

அன்னை தேனீ பண்ணையில் மருத்துவ குணம் நிறைந்த முருங்கைத்தேன், தும்பைத்தேன், துளசித்தேன் விற்பனைக்கு உள்ளன. இங்கு இத்தாலிய தேனீப்பெட்டிகள் குறைந்த விலையில் கிடைக்கும். தரமான தேன் பிரித்தெடுக்கும் கருவி யையும் வாங்கலாம். கலப்படமற்ற தேன் மட்டுமே விற்பனை என்பதால் உற்பத்தியாக உள்ள பண்ணை தேனீ வளர்ப்பு பயிற்சி மற்றும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**முதல் ஸ்பைசஸ் பார்க்:** கேரளாவில் இடுக்கி மாவட்டத்தில் புத்தடியில் துவக்கப்பட்டுள்ளது. கம்ப்யூட்டர் தொழில்நுட்ப உதவியுடன் இப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. வியாபாரிகள் கம்ப்யூட்டர் மூலமாக ஏலம் கேட்க முடியும். இயந்திரங்கள் மூலமாக இளம்பச்சை, பெருவெட்டு, இளம் பச்சை நடுத்தரம், குறைவான பச்சை, சன்னரகம் என்று ஏலக்காய் தரம் பிரிக்கப்படுகிறது. 50 கிராமிலிருந்து 60 கிலோ வரை எடைபோட்டு பேக்கிங் செய்யும் வசதியும் ஏலக்காய் பொடி தயாரிக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்துடன் வெள்ளை மிளகு தயாரிக்கும் நீராவி இயந்திரமும் இணைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தை நிலவரங்கள் தெரிந்துகொள்ளும் விதமாக இன்டர் நெட் வசதியும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. நல்ல விலை கிடைக்கும்வரை ஏலக்காய் இருப்பு வைப்பதற்கு குளிர்பதன கிட்டங்கியும் அமைக்கப் பட்டுள்ளது. இங்கு சேமித்து வைத்தபின் தரப்படும் ரசீதின் அடிப்படையில் இந்த ஸ்பைசஸ் பார்க்கில் அமைக்கப் பட்டுள்ள யூனியன் வங்கி விவசாயிகளுக்கு கடனை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**சம்பங்கி சாகுபடி - விவசாயி அனுபவம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,00:00 IST



ரகம் - கிழக்கு வீரிய ரகம். பயிரிடும் நிலத்தின் அளவு - தோராயமாக 30 சென்ட். உழவு முறை - வாரம் ஒரு உழவு போட்டு 15 நாட்களுக்கு நிலத்தை ஆறவைக்க, மீண்டும் 15 நாட்களுக்கு ஒரு முறை விதமாக 2 உழவு போடவேண்டும். நன்கு ஆறிய பின் 8 யூனிட் அளவு (4 டிராக்டர்) நன்கு மக்கிய சாணமாக இடவேண்டும். இதை 15 நாட்களுக்கு ஆறவிட வேண்டும். பின் அதை நிலத்தில் நன்கு இறைத்துவிட வேண்டும். இறைத்த பின் ஒரு உழவு விட்டுவிட வேண்டும். கிழங்கின் அளவு 30 சென்ட், 10 மூடை.

விதை நேர்த்தி: கிழங்கு வாங்கிக்கொண்டு வந்து வேப்பமரத்தின் நிழலில் உலரவைக்க வேண்டும். உலரவைத்த கிழங்கை 3 நாட்களுக்கு 3 முறையாக கை பார்க்க வேண்டும். அவ்வாறு செய்தால் அருகம்புல் வேர் கோரைக்கிழங்கு மற்ற களைகள் அந்த கிழங்கிலிருந்து முற்றிலும் அகற்றப்படும்.

**பார் அமைக்கும் முறை:** சிறிய சிறிய வாய்க்கால்கள் எடுத்து கால் அடி வீதத்தில் மூன்று எட்டுக்கு ஒரு நிறை வீதமாக மூன்று பாத்திகளாக அமைக்க வேண்டும். ராஜா வாய்க்கால் கரை 2 அடியில் அமைக்க வேண்டும். பாத்தி அரை அடிக்கு ஒரு கரை வீதமாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

**கிழங்கு நடவுமுறை:** ஒரு அடிக்கு ஒரு இடத்தில் மூன்று, நான்கு கிழங்கை அடிப்பாகம் பூமிக்குள்ளும் மேல்பாகம் பூமிக்கு மேல்நோக்கி இருக்குமாறு நடவு செய்ய வேண்டும்.

**நீர்ப்பாசனம்:** கிழங்கு நட்ட பிறகு உடனே நீர் பாய்ச்ச வேண்டும். மண்ணின் தன்மையை பொறுத்து கரிசல் மண்ணாக இருந்தால் 5 நாட்களுக்கு ஒரு முறையும் செவல் மண்ணாக இருந்தால் 3 நாட்களுக்கு ஒரு முறையும் நீர் பாய்ச்ச வேண்டும். நான்காவது முறை தண்ணீர் பாய்ச்சியபிறகு களை தோன்ற ஆரம்பிக்கும்.

**களை நிர்வாகம்:** சூழ்நிலைக்கேற்றவாறு 10-15 நாட்களுக்கு ஒரு களை எடுக்க வேண்டும். 30-40 நாட்களில் கிழங்கு முளைப்புத்திறன் வந்துவிடும். களைகள் வந்து கிழங்கினை பாதிக்காதவாறு களைகளை நீக்கி சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

**வளர்ப்பு முறை:** நட்ட 60 நாட்களில் 5-10 செ.மீ. வரை கிழங்கு வளர்ந்துவிடும். நன்கு வளர்ந்தபின் 10-15 செ.மீ. வந்தபின் இயற்கை வேளாண்மை உரம் இடவேண்டும்.

மேலுரம்: இயற்கை வேளாண்மை உரத்தை 30 சென்டுக்கு 1 மூடை வீதமாக எடுத்து ஒரு டிரம்மில் போட்டு தண்ணீர் கலக்கி, நீர் பாய்ச்சும்போது ஊற்ற வேண்டும். இவ்வாறு செய்தால் செடி நன்றாக வளர்ந்து கரும்பச்சை நிறத்தில் இருக்கும். பரவலாக அரும்புகள் தோன்றி பூக்கள் வர ஆரம்பிக்கும்.

**உரம் இடும் முறை:** இயற்கை வேளாண்மை உரத்தை 30 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீரில் கலந்து செடிகளுக்கு விடவேண்டும். நன்றாக தண்ணீர் பாயக்கூடிய நிலத்திற்கு மட்டும் பொருந்தும். இவ்வாறு நடவு செய்து களை இல்லாமல் இருக்கும் நிலத்திற்கு நோய் தாக்கும் அபாயம் இல்லை.

**பயிர் பாதுகாப்பு அறை**: 30 நாட்களுக்கு ஒரு முறை 3 லிட்டர் மாட்டு கோமியம், அரைலிட்டர் ஆறியவடிகஞ்சி, பால் 300 மில்லி, மஞ்சள்தூள்-300 கிராம் கலந்து பவர் ஸ்பிரேயர் மூலம் தெளிக்க

வேண்டும். இயற்கை உரத்தை பயன்படுத்த இயற்கை முறையில் சாகுபடி செய்தோமானால் பூ நன்றாகவும் பருமனாகவும் இருக்கும். நல்ல மகசூல் கிடைக்கும். நல்ல விலையும் கிடைக்கும்.

**அறுவடை:** எல்லா மாதங்களிலும் வரும்.

**வாழ்நாள்:** 5, 6 வருடம் வரை இருக்கும்.

**தொடர்புக்கு:** சவடமுத்து, அலவாச்சிபட்டி, திண்டுக்கல். 98436 32040.-கே.சத்தியபிரபா, உடுமலை.

**மஞ்சள் வரத்து அதிகரித்தாலும் விற்பனை சரிவு இருப்பு மஞ்சள் அளவு அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,03:02 IST

ஈரோடு: மஞ்சள் வரத்து அதிகரித்த போதும், மஞ்சளுக்கு போதிய விலை கிடைக்காததால், விவசாயிகள் குறைந்தளவே விற்பனை செய்து வருகின்றனர். மஞ்சள் விலை இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து உயர்ந்து வந்ததால், ஈரோடு, சேலம், கோவை, தர்மபுரி உள்ளிட்ட பகுதிகளில் மஞ்சள் சாகுபடி பரப்பளவு இரு மடங்கு உயர்ந்தது. கர்நாடகா மாநிலம் மைசூரு, கொள்ளேகால், சாம்ராஜ்நகர் பகுதியிலும் சாகுபடி பரப்பு பல மடங்கு உயர்ந்தது. டிசம்பர் மாதம் மஞ்சள் அறுவடை துவங்கியது. ஜனவரி மாதம் முதல் ஈரோட்டிலுள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடம், வெளிமார்க்கெட், கோபி மார்க்கெட், ஈரோடு கூட்டுறவு மார்க்கெட்டுக்கு புதிய மஞ்சளை விவசாயிகள் கொண்டு வர ஆரம்பித்தனர்.

மஞ்சள் வரத்து அதிகரிப்பு காரணமாக, மஞ்சள் விலை தொடர்ந்து சரிந்து வருவதால், கைச் செலவுக்கு பணம் தேவைப்படும் விவசாயிகள் பலரும், அறுவடை செய்யப்பட்ட மஞ்சளை விற்பனை செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால், விற்பனைக் கூடங்களுக்கு மஞ்சள் வரத்து தொடர்நது அதிகரித்து வருகிறது. நடப்பு வாரம் இரண்டு நாட்கள் வார விடுமுறைக்கு பின், நேற்று முன்தினம் மஞ்சள் மார்க்கெட் திறந்ததுமே, லாரி மற்றும் வேன்களில் விவசாயிகள் மஞ்சள் மூட்டைகளை கொண்டு வந்தனர். ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு 935 மூட்டைகள் வரத்தானது. அதில், 600 மூட்டைகள் விற்பனையானது. வெளிச்சந்தையில் 6,983 மூட்டைகள் வரத்தானது. அதில், 1,532 மூட்டைகள் விற்றன. ஈரோடு கூட்டுறவு சங்கத்துக்கு 1,320 மூட்டைகள் வரத்தானது. அதில், 989 மூட்டைகள் மட்டுமே விற்பனையானது. கோபி சங்கத்துக்கு வந்த 308 மூட்டைகளில், 295 மூட்டைகள் விற்பனையானது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விரலி குவிண்டால் 8,889 ரூபாயில் இருந்து 9,359 ரூபாய் வரை விற்றது. கிழங்கு 8,499 ரூபாயில் இருந்து 8,901 ரூபாய் வரை ஏலம் போனது.

வெளிச்சந்தையில் விரலி 6,966 ரூபாயில் இருந்து அதிகபட்சமாக 9,204 ரூபாய், கிழங்கு 6,460 ரூபாயில் இருந்து அதிகபட்சமாக 8,864 ரூபாய் வரை ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில் ஒழுங்கு முறை கூடத்துக்கு 820 மூட்டை வந்ததில், 734 மூட்டை விற்றது. விரலி 9,377 முதல் 9,709 ரூபாய் வரையும், கிழங்கு 8,539 முதல் 8,911 ரூபாய் வரையும் விலை போனது.வெளி மார்க்கெட்டில் 713 மூட்டை வந்ததில் 417 மூட்டை விற்றது. விரலி 7,300 முதல் 9,455 ரூபாய் வரையும், கிழங்கு 6,799 முதல் 8,579 ரூபாய் வரையும் விலை போனது.நேற்று ஒரே நாளில் மஞ்சள் விலை சராசரியாக 300 ரூபாய் விலை உயர்ந்திருந்தது. மஞ்சள் வரத்து அதிகமான போதும், அதிக விலையை எதிர்பார்த்து பெரிய விவசாயிகள் மஞ்சளை வீட்டில் இருப்பு வைக்க ஆரம்பித்துள்ளனர்.

**கொல்லிமலை பகுதி மரவள்ளியில் பூச்சி தாக்குதல் ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,02:43 IST

நாமக்கல்: கொல்லிமலை சுற்றுவட்டார கிராமப்புறங்களில், ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள மரவள்ளி பயிர், வெள்ளைப்பூச்சி தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளது. நோய் தாக்குதலுக்கு உள்ளான மரவள்ளி செடிகள் அனைத்தும் காய்ந்து, கருகி வெறும் குச்சியாய் காணப்படுவது, விவசாயிகளை கவலையடையச் செய்துள்ளது. நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை சுற்றுவட்டார கிராமங்களில், காஃபி, மிளகு போன்ற பணப்பயிர்கள் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இதுதவிர, நெல், சாமை மற்றும் மரவள்ளியும் கணிசமான அளவில் பயிரிடப்படுகிறது. மலையில் உள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களில், பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பரபரப்பளவில் மரவள்ளி விவசாயம் செய்யப்படுகிறது. அவ்வாறு விவசாயம் செய்யப்படும் மரவள்ளி, சேலம் மாவட்டம், ஆத்தூர், நாமகிரிப்பேட்டை, மல்லூர், பாப்பிரெட்டிப்பட்டி, புதுச்சத்திரம் போன்ற பகுதியில் செயல்படும் தனியார் சேகோ ஆலைகளுக்கு அனுப்பப்படுகிறது. அதன்மூலம், அங்குள்ள விவசாயிகள் கணிசமான வருவாய் ஈட்டி வருகின்றனர்.

இதுபோன்ற பயிர்கள் நடவு செய்ய பருவமழை அல்லது கிணற்றுப் பாசனைத்தை நம்பியே, கொல்லிமலை விவசாயிகள் உள்ளனர். கடந்த ஆண்டு, கொல்லிமலை சுற்றுவட்டாரத்தில் பரவலாக பெய்த மழைப்பொழிவால், நிலத்தடி நீர்மட்டம் கணிசமான அளவில் உயர்ந்தது. எனினும், அடுத்தடுத்து வந்த பருவநிலை மாற்றம் காரணமாக மழை பொய்த்துப் போனது. வெயிலின் தாக்கமும் கணிசமான அளவில் அதிகரித்தது. அதனால், பாசன வசதி அளித்து வந்த ஆறு, கிணறு, குளம் உள்ளிட்ட நீர்நிலைகள் வறண்டு வானம் பார்த்த பூமியாய் காட்சியளித்து வருகிறது. இது, கொல்லிமலை விவசாயிகளை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, மரவள்ளி விவசாயிகள் தலையில் இடி விழும் வகையில், அங்கு பயிரிடப்பட்ட மரவள்ளி பயிர்கள் வெள்ளைப்பூச்சி தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, கொல்லிமலை, எடப்புள்ளி நாடு, சாமக்கல் கிராமத்தில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட மரவள்ளி, வெள்ளைப்பூச்சி தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளது.பாதிக்கப்பட்ட மரவள்ளி பயிர்களின் இலைகள், தண்டுப் பகுதிகள் முற்றிலும் கருகி, வெறும் குச்சியாய் காட்சியளிக்கிறது. அவற்றில் மகசூல் எதுவும் கிடைப்பதில்லை. விறகாக எரிப்பதற்கு மட்டுமே அச்செடிகள் பயன்படுத்தும் நிலை உள்ளது என, சாமக்கல் கிராம விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து, அக்கிராம மக்கள், மாவட்ட கலெக்டரிடம் அளித்துள்ள மனுவில் குறிப்பிடப்பட்ட விபரம்: கொல்லிமலையில் உள்ள விவசாயிகள், மரவள்ளிக் கிழங்கை மானாவாரி பயிராக விவசாயம் செய்து பிழைப்பு நடத்தி வருகின்றனர். ஏக்கர் ஒன்றுக்கு, 60 முதல் 70 மூட்டை வீதம் மட்டுமே மகசூல் கிடைக்கிறது. இச்சூழலில், எடப்புள்ளி நாடு, சாமக்கல் கிராமத்தில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட மரவள்ளியில், வெள்ளைப் பூச்சி தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால், செடிகள் முற்றிலும் காய்ந்து, கருகிய நிலையில் காணப்படுகிறது. இதை, சம்மந்தப்பட்ட அதிகாரிகள் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நேரடி கொள்முதலில் முறைகேடு: விவசாயிகள் சங்கத்தினர் புகார் மனு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,00:03 IST

விழுப்புரம் : நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நடைபெறும் முறைகேடுகளை தடுக்க வேண்டுமென விவசாயிகள் சங்கம் புகார் தெரிவித்துள்ளது. தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சுப்ரமணியன் கலெக்டருக்கு அனுப்பியுள்ள புகார் மனு: விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலமாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதனால் விவசாயிகளுக்கு வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்வதை விட 100 முதல் 150 ரூபாய் வரை கூடுதல் விலை கிடைக்கிறது. கொள்முதல் நிலையங்களில் எ டை போடுவதற்கும், தூற்றுவதற்கும் 20 ரூபாய் கூடுதலாக வசூலிக்கின்றனர். மேலும் 10 முதல் 15 நாட்கள் காத்திருந்து விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். காலதாமதம்

மற்றும் முறைகேடுகளை தடுக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

**மாவட்டத்தில் இலவ மர சாகுபடி பரப்பு அதிகரிப்பு : லாபம் அதிகம் தருவதால் விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,00:14 IST

தேனி : தேனி மாவட்டத்தில் உற்பத்தியாகும் இலவம் பஞ்சுக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுதால் லாபம் தரும் தொழிலாக உள்ளது. இதனால் தேனி மாவட்டத்தில் இலவம் மர சாகுபடி பரப்பு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது.
இலவம் பஞ்சு விவசாயமும், அதை சார்ந்த மெத்தை தயாரிப்பு தொழிலும், மாவட்டத்தில் லாபம் தரும் தொழிலாக உள்ளது. வருஷநாடு, மயிலாடும்பாறை, ஆண்டிபட்டி, போடி கொட்டக்குடி, மேற்கு மலை பகுதிகள், மேலசொக்கநாதபுரம் உட்பட 100 க்கும் மேற்பட்ட கிராமங்களில் அதிகளவில் இலவம் மரம் விவசாயம் நடக்கிறது.

லாபம் அதிகம் இருப்பதால் ஆண்டுக்கு ஆண்டு சாகுபடி பரப்பளவும் அதிகரித்து வருகிறது. மாவட்டத்தில் 4,500 ஹெக்டேரில் தற்போது இலவம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ஒரு முறை பலன் தருவதால், மரங்களை பராமரிப்பதில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது. ஏப்ரல், மே மாதங்கள் அறுவடை காலமாகும். இவ்வாண்டில் விளைச்சல் நன்றாக உள்ளதால் விவசாயிகள் மகிழ் ச்சி அடைந்துள்ளனர். ஆண்டுக்கு 23 ஆயிரத்து 650 டன் பஞ்சு கிடைக்கிறது. போடியில் இலவம் பஞ்சை பயன்படுத்தி மெத்தைகள், தலையணைகள் தயாரிக்கப்படுகின்றன.

இங்கு தயாராகும் மெத்தைகள் டெல்லி, மும்பை என வடமாநிலங்களில் அதிகளவில் விற்பனைக்கு அனுப்பபடுகிறது. ஆஸ்திரேலியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கும் இலவம் பஞ்சுகள் ஏற்றுமதிசெய்யப்படுகிறது. இலவம் பஞ்சைக்கொண்டு தயாரிக்கப்படும் கர்ப்பிணிகளுக்கான பூமாலை போன்ற விஷேச தலையணைக்கு ஆஸ்திரேலியாவில் கிராக்கி அதிகம். கர்ப்பிணிகள் இந்த தலையணையை பயன்படுத்தும் போது உடல் வலி தெரியாமலும், குழந்தை பாதுகாப்பாக இருக்கவும் பயன்படுகிறதாம். தொடர்ந்து லாபர் தரும் இலவம் பஞ்சு சாகுபடியை மேலும் அதிகரிக்க விவசாயிகள் ஆர்வமுடன் உள்ளனர்.

**தக்காளி விலையில் சரிவு விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,00:13 IST

தேனி : தக்காளி விலை சரிவால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மாவட்டத்தில் வருஷநாடு,கடமலைகுண்டு, மயிலாடும்பாறை, கூடலூர் பகுதிகளில் மானாவரி சாகுபடியாகவும், ஆண்டிபட்டி, தேனி ஒன்றிய பகுதிகள் உட்பட தோட்டக்கலை பயிராகவும் 1,500 ஏக்கரில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் அதிகளவு தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளதுடன், விளைச்சலும் அதிகரித்துள்ளது. இந்நிலையில் கடந்த மார்ச் முதலே தக்காளிக்கு சரியான விலை கிடைக்கவில்லை. ஏழு முதல் பத்து ரூபாய் அளவிற்கே விற்பனையானது. தற்போது விலை குறைந்து வெளி மார்க்கெட்டில் இரண்டு ரூபாய், மூன்று ரூபாய்க்கு விற்பனையாகிறது. விவசாயிகளிடம் இரு ந்து கிலோ ஒரு ரூபாய்க்குதான் வியாபாரிகள் வாங்குகின்றனர். இதனால் பறிப்பதற்கான கூலிக்கு கூட கட்டுப்படியாகாமல் விவசாயிகள் நஷ்டம் அடைந்து வருகின்றனர். பல விவசாயிகள் தக்காளியை பறிக்காமலே செடியிலேயே விட்டுவிட்டனர். பல இடங்களில் கால்நடைகளுக்கு பறித்து போடுகின்றனர். தக்காளி விலை சரிவால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தேனி உழவர் சந்தையில் நேற்று ஒரு கிலோ தக்காளி மூன்று ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இன்னும் சில நாட்களில் இந்த விலை மேலும் குறையும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**வாழைப்பழம் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2011,00:13 IST

தேனி : ஒரு கிலோ வாழைப்பழத்தின் விலை 10 ரூபாயாக உயர்ந்துள்ளது. தேனி மாவட்டத்தில் ஆறாயிரம் எக்டேருக்கும் அதிக பரப்பில் "ரொபஸ்டா' என்ற பச்சை வாழை சாகுபடி நடந்து வருகிறது. பழுத்த உடன் மஞ்சள் கலரில் காணப்படும் இந்த வாழைப்பழங்களுக்கு வடமாநிலங்கள், வட மாவட்டங்களில் நல்ல கிராக்கி உள்ளது. அங்குள்ள வியாபாரிகள் இங்கு வந்து தங்கி விவசாயிகளுக்கு அட்வான்ஸ் கொடுத்து வாழைப்பழங்களை வாங்கிச் செல்கின்றனர். ஒரு கிலோ வாழைப்பழம் 10 ரூபாய் வரை விற்கப்படுகிறது. சில்லரை மார்க்கெட்டில் ஒரு பழம் ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு ஒரு தாருக்கு 400 ரூபாய்க்கு மேல் விலை கிடைக்கிறது. இதனால் வாழை சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**சூரியகாந்தியை விற்கலாம்:வேளாண் பல்கலை பரிந்துரை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2011,21:35 IST

கோவை : ""விலையேற்றத்துக்கு குறைந்த வாய்ப்பே உள்ளதால், அறுவடை செய்த சூரியகாந்தியை உடனே விற்கலாம்,'' என, வேளாண் பல்கலை தெரிவித்துள்ளது. வேளாண் பல்கலை அறிக்கை: தமிழக விவசாயிகள் அறுவடை செய்த சூரியகாந்தி விதையை விற்கலாமா, நல்ல விலைக்காக சேமித்து வைக்கலாமா என தெரிந்துகொள்ள ஆவலாக உள்ளனர். சந்தைப்படுத்தலில் முக்கிய முடிவுகளை விவசாயிகள் மேற்கொள்ள, தமிழ்நாடு வேளாண் பல்கலையிலுள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம், வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த 11 ஆண்டுகளாக சூரியகாந்தி விதையின் விலையை ஆராய்ந்தது. ஏப்- மே மாதத்தில் ஒரு கிலோவுக்கு ரூ.27-30 வரை இருக்கலாம் என ஆராய்ச்சி முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. சந்தையில், எடையுள்ள விதைகளுக்கு அதிக விலை கிடைக்கும். விதையின் எடையை பொறுத்து விலை மாறுபடும். விலையேற்றத்துக்கு குறைந்த வாய்ப்பே உள்ளதால் அறுவடை செய்த சூரியகாந்தியை விற்கலாம். விபரங்களுக்கு, "தேசிய வேளாண் புதுமை திட்டம்- உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண் பல்கலை, கோவை-641003' என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். மேலும், 0422-2431405 என்ற எண்களில் தொடர்பு கொள்ளவும். தொழில்நுட்ப விபரங்களுக்கு, "கணேசமூர்த்தி, பேராசிரியர் மற்றும் தலைவர், எண்ணெய் வித்துக்கள் துறை, தமிழ்நாடு வேளாண்பல்கலை, கோவை- 3' என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். மேலும், 0422-2450812 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**பசுந்தாள் உர நடவுப்பணி தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2011,21:41 IST

ஆனைமலை : ஆனைமலை சுற்றுவட்டார பகுதிகளில் நெல் அறுவடை முடிந்துள்ளதால் பசுந்தாள் உர நடவுப்பணி நடந்து வருகிறது.ஆனைமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு) சாந்தாமணி கூறியதாவது: ஆனைமலை சுற்றுவட்டார பகுதிகளில் நெல் அறுவடை முடிந்து விட்டது. குறுவை நெல் சாகுபடிக்காக வயல்கள் தயாராகும் பணி நடந்துவருகிறது. பசுந்தாள் விதை நடவுப்பணி நடந்து வருகிறது.விவசாயிகளுக்கு தேவையான பசுந்தாள் விதைகள் வேளாண்மை துறை மூலம் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது. தேவையான

விவசாயிகள் சிட்டா, ரேஷன் கார்டு நகலுடன் வேளாண்மைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**வறட்சியின் கோரப்பிடியில் தென்னை பாதுகாக்க போராடும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2011,22:00 IST

பல்லடம் : பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் மழை வளம் குறைவு காரணமாக, நிலத்தடி நீர் மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது. வறட்சியின் பிடியில் இருந்து தென்னைகளை காப்பாற்ற விவசாயிகள் போராடி வருகின்றனர். பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் 60 ஆண்டுகளாக தென்னை விவசாயம் பிரதான தொழிலாக விளங்கி வருகிறது. 80 ஆண்டுகள் வரை பயன்தரக்கூடிய நாட்டு ரகம், 30 ஆண்டுகள் வரை மட் டுமே பயன் தரும் ஒட்டுரக தென்னை என இப்பகுதியில் 10 லட்சத்துக்கும் மேல் தென்னைகள் உள்ளன. பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் கடந்த ஐந்து ஆண்டுகளாக போதிய மழை வளம் இல்லை. இதன் காரணமாக நிலத்தடி நீர் மட்டம் தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது.

இதனால், தென்னை விவசாயிகள் கடும் பாதிப்பு அடைந்து வருகின்றனர். பி.ஏ.பி., பாசன வசதி கொண்ட விவசாயிகள் மட்டும் விதி விலக்காக இருந்தனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக பி.ஏ.பி., பாசன வசதி கொண்ட பகுதிகளிலும் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. தோப்புகளில் உள்ள தென்னை மரங்களை வறட்சியின் கோரப்பிடியில் இருந்து காப்பாற்ற, ஆழ்குழாய் கிணறு (போர்வெல்) அமைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். சில விவசாயிகள், தங்களின் பழைய ஆழ்குழாய் கிணறுகளின் ஆழத்தை அதிகப்படுத்த துவங்கியுள்ளனர். பல்லடம் பகுதிகளில் குறைந்தபட்சம் 800 அடி முதல் அதிகபட்சம் 1,200 அடி வரை ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டு வருகிறது. ஆழ்குழாய் கிணறு அமைக்க ரூ.80 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை செலவு ஏற்படுகிறது. ஆழ்குழாய் கிணறு தண்ணீர் மூலம் சொட்டுநீர் பாசனம் அமைத்து, தென்னையை வறட்சியின் கோர பிடியில் இருந்து காப்பாற்ற முடியும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

**காட்டுக்குள் குப்பை:வனத்துறை எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2011,21:29 IST

பேரூர் : எளிதில் தீப்பற்றும் பொருட்கள், சுற்றுச் சூழலை பாதிக்கும் பிளாஸ்டிக் பைகள், பொருட்களை எடுத்துச் செல்ல வனத்துறையினர் தடை விதித்துள்ளனர். கோவை, சுற்றுப்பகுதிகளில் வனப்பகுதிகள் நிறைந்துள்ளன. இயற்கை வளமிக்க காடுகளால்,

வனவிலங்கள், பறவை இனங்கள் புகழிடம் பெற்றுள்ளன. கோடை காலத்தில் இந்த மலைப்பகுதியில் பொதுமக்கள் சுற்றுலா செல்கின்றனர். குடும்பத்துடன் செல்வோர், குழுக்களாக செல்லும் வாலிபர்கள் அதிகம். குடும்பத்தோடு செல்வோர், உணவு பொருட்களை எடுத்துச் செல்கின்றனர். குறிப்பாக பிஸ்கட், பாக்கெட் செய்யப்பட்ட உணவுகள், பாட்டிலில் அடைக்கப்பட்ட குளிர்பானங்களை எடுத்துச் செல்கின்றனர். இளைஞர்களும் கூட, பாட்டில்களில் அடைக்கப்பட்ட குளிர்பானங்களை அதிக அளவில் கொண்டு செல்கின் றனர். மலைப்பகுதியை பார்த்து ரசிக்கின்றனர். அதோடு, சிற்றுண்டிகளை சாப்பிட்டு விட்டு பிளாஸ்டிக் குப்பைகளை ஆங்காங்கே வீசி வருகின்றனர். இந்த பாட்டில்கள், பிளாஸ்டிக் பேக் போன்றவைகளை வனத்துறையினர் சேகரித்து அப்புறப் படுத்தியுள்ளனர்.

சுமார் ஆறு டன் அள வுக்கு இந்த குப்பைகள் குவிந்திருந்தன. கோடை காலத்தில் வனப்பகுதிகளில் கடும் வெயில் நிலவுகிறது. மலைகளுக்குச் செல்லும் பக்தர்களிடம் எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், பீடி, சிகரெட் உள்ளிட்ட போதை வஸ்து பொருட்களை கொண்டு செல்ல வனத்துறை தீவிர "தடை' விதித்துள்ளது. மலையடிவாரத்தில் "இரண்டு ஷிப்ட்'களாக பிரிக்கப்பட்டு, இரவு, பகலாக தீவிர கண்காணிப்பு பணியில் வனத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். இதுகுறித்து, போளுவாம்பட்டி பாரஸ்டர் பழனிராஜா கூறுகையில்,""வனப்பகுதி என்பதால், பக்தர்களிடம் பிளாஸ்டிக், எளிதில் தீப்பற்றும் பொருள் உள்பட போதை வஸ்து பொருட்களை மலைமீது கொண்டு செல்ல தடை விதித்துள்ளோம்.

மாவட்ட வன அதிகாரி திருநாவுக்கரசு உத்தரவின் பேரில், ரேஞ்சர் பார்த்திபன் மேற்பார்வையில் மொத்தம் 20 பேர் இப்பணியில் ஈடுபட்டுள்ளோம். கோவிலுக்கு வரும் பக்தர்கள், சுற்றுப்புற பகுதியில் தூக்கி வீசப்பட்ட பிளாஸ்டிகள் கழிவுகள் மட்டுமே இதுவரை 6 டன்கள் வரை சேகரிக்கப்பட்டுள்ளது. அனைத்தும், வன அலுவலக வளாகத்தில் குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளது,"என்றார்.

# நடப்பு பருவத்தில் நெல் கொள்முதல் 2.57 கோடி டன்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு 2010–11 சந்தைப்படுத்துதல் பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) இதுவரையிலான காலத்தில் இந்திய உணவுக் கழகம் 2.57 கோடி டன் நெல் கொள்முதல் செய்துள்ளது. இது, முந்தைய 2009–10 பருவத்தின் இதே காலத்தில் 2.59 கோடி டன்னாக இருந்தது. ஆக, கொள்முதல் ஒரு சதவீதம் குறைந்துள்ளது.

முந்தைய பருவத்தில் பஞ்சாப் மாநிலம்தான் மத்திய அரசின் தொகுப்பிற்கு அதிகமாக நெல் வழங்கியது. நடப்பு பருவத்தில் இதுவரை அம்மாநிலத்திலிருந்து பெறப்பட்ட நெல் 86.30 லட்சம் டன் ஆகும். இது, சென்ற பருவத்தின் இதே காலத்தில் 92.80 லட்சம் டன்னாக இருந்தது.

நம் நாட்டில் நெல் உற்பத்தியில் முதலிடத்தில் இருந்து வரும் ஆந்திர மாநிலத்திலிருந்து 42.70 லட்சம் டன் நெல் வாங்கப்பட்டுள்ளது. இது, முந்தைய பருவத்தின் இதே காலத்தில் 39.60 லட்சம் டன்னாக இருந்தது.

கடந்த 2010–11–ஆம் ஆண்டு சந்தைப்படுத்துதல் பருவத்தில் (ஏப்ரல்–மார்ச்) இந்திய உணவுக் கழகம் 2.25 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்துள்ளது.

**உள்நாட்டில் நல்ல விலை கிடைத்து வருவதால் ஏலக்காய் ஏற்றுமதி குறையும் சூழ்நிலை**



*பி கே கிருஷ்ணகுமார்*

*கொச்சி*

*உள்நாட்டில் ஏலக்காய் விலை அதிகரித்து வருவதால், ஏற்றுமதி குறையத் தொடங்கியுள்ளது. எனவே சர்வதேச அளவில் ஏலக்காய்க்கான மிகப் பெரிய சந்தையான மத்திய கிழக்கு நாடுகளில் கவுதமாலா நாட்டின் ஏலக்காய் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. ஏலக்காய் ஏற்றுமதியில் நம் நாட்டுக்கு போட்டியாக கவுதமாலா இருந்து வருகிறது.*

*கவுதமாலா*

*கடந்த 2009–10–ஆம் ஆண்டில் கவுதமாலா நாட்டில் ஏலக்காய் உற்பத்தி கணிசமாக சரிவடைந்தது. எனவே சர்வதேச சந்தைகளில் இந்திய ஏலக்காயின் ஆதிக்கம் வலுத்தது. அவ்வாண்டில் இந்தியாவின் ஏலக்காய் ஏற்றுமதி 1,975 டன்னாக இருந்தது. அண்மைக் காலத்தில் கவுதமாலா நாடு கடும் போட்டி ஏற்படுத்தியுள்ள நிலையிலும் நடப்பாண்டு பிப்ரவரி வரையிலான 11 மாதங்களில் இந்தியா 865 டன் ஏலக்காயை ஏற்றுமதி செய்துள்ளது. தற்போது நிலைமை மாறியுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் கவுதமாலா நாட்டின் ஏலக்காய் இந்திய ஏலக்காயை விட கிலோ ஒன்றுக்கு சுமார் 5 டாலர் குறைவாக உள்ளது. இதனால் கவுதமாலா ஏலக்காய்க்கு தேவை அதிகரித்துள்ளது. இந்திய ஏலக்காயின் விலை தற்போது கிலோ ஒன்றுக்கு 30 டாலராக உள்ளது. கவுதமாலா ஏலக்காயின் விலை கிலோ ஒன்றுக்கு 25–27 என்ற டாலர் என்ற அளவில் உள்ளது.*

*விவசாயிகள்*

கடந்த 2009–10–ஆம் ஆண்டில், சில்லரை விற்பனையில் ஒரு கிலோ ஏலக்காய் விலை ரூ.1,000 என்ற அளவை தாண்டியிருந்தது. பின்னர் ரூ.1700 என்ற அளவை எட்டியது. எனினும் 2011–ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ரூ.1,200–ஆக குறைந்தது.

இந்தியாவில் தற்போது ஒரு கிலோ ஏலக்காய் விலை ரூ.1,000 என்ற அளவில் உள்ளது. மேலும் விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் ஏலக்காயை கையிருப்பில் வைத்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன. உள்நாட்டு விற்பனையில் அதிக லாபம் கிடைக்கும் நிலை உருவாகியுள்ளதால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டிய தேவை குறைந்து போயுள்ளது.

உற்பத்தி மதிப்பீடு

நடப்பு பருவத்தில் ஏலக்காய் உற்பத்தி 11,000 டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற ஆண்டில் கவுதமாலா நாட்டின் உற்பத்தி 20,000 டன்னாக இருந்தது. இது, முந்தைய மதிப்பீட்டைக் காட்டிலும் 4,000 டன் அதிகமாகும். ஒரு கிலோ ஏலக்காய் விலை ரூ.1,000 என்ற அளவை தாண்டியிருந்தாலும், அதற்கேற்ப உரம், தொழிலாளர் கூலி போன்ற செலவினங்களும் உயர்ந்து விட்டன. எனவே விலை 900–த்துக்கு கீழே சென்றால் ஏலக்காய் சாகுபடியில் விவசாயிகளுக்கு ஆர்வம் குறைந்து விடும் என ஏலக்காய் விவசாயிகள் சங்கத் செயலாளர் கே.கே. தேவாசியா தெரிவித்தார்.